உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய நீலகிரி மாவட்டத்தை சிறப்பு நிகழ்வாகக் கருதி, கூடலூர், கோத்தகிரி போன்ற பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளிலெல்லாம் M.R.I., C.T. scan வசதிகளை தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறுவி, தனது பொற்கரங்களால் அவற்றைத் திறந்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது மலைப் பிரதேசம் என்ற காரணத்தினாலே, அங்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசால், படிப்படியாக அனைத்து வசதிகளும், தேவைக்கேற்ப, நிதிநிலைமைக்கேற்ப ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

135—

வேளாண்மைக் கல்லூரி

***60—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, நீங்கள் இருளில் இருப்போரை வெளிச்சத்திற்கு மாற்றும் மெழுகுவர்த்தி! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் விரல் அசைவால் வரங்களைப் பொழியும் கார்மேகம்! அம்மா, நீங்கள் ஆழ்ந்த ஞானத்தால், தாழ்ந்த சமூகத்தை உயர்த்திக் காட்டும் கோபுரம்! (மேசையைத் தட்டும் ஒலி) மெழுகுவர்த்தி, கார்மேகம், கோபுரம் இவை யாவும் தனக்காக வாழ்வதில்லை. தாயே! நீங்கள் எங்களுக்காக உழைத்து வாழ என்றும் தயங்குவதில்லை. நீதியான செங்கோல், நேர்மையான மணிமகுடம், நிம்மதியான ஆட்சி, அதுவே தமிழகத்தின் காட்சி! கலிபோர்னியா நாட்டின் சுதந்திர தின விழாவில் 'மக்கள் தலைவர்' என்ற உயரிய விருதினைப் பெறவிருக்கின்ற மகத்தான மக்கள் தலைவி, மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர் பாதங்களைப் பணிவோடு பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-50

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியானது, நாகை, தஞ்சை மற்றும் அரியலூர் மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்ட தொகுதி; வேளாண் தொழிலை ஆதாரமாகக் கொண்ட தொகுதி; ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களை உள்ளடக்கிய மிகவும் பின்தங்கிய தொகுதி. ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கத் தேவையான இடம் இருக்கிறது. இப்பகுதியிலுள்ள மாணாக்கர்களின் எதிர்கால நலன் கருதி, கருணையே வடிவமான மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.*

[2016 செப்டம்பர் 1

ஒரு வேளாண்மைக் கல்லூரியைப் புதிதாகத் தொடங்க வேண்டுமானால், ரூபாய் 50 கோடி நிதியும், குறைந்தது 110 ஏக்கர் விவசாய நிலமும் தேவைப்படுகிறது. ஒவ்வொரு கூடுதல் பட்டப் படிப்பினையும் அளிக்க வேண்டுமானால், 50 ஏக்கர் நிலம் அதிகப்படியாகத் தேவைப்படுகிறது. மேலும், காட்டுமன்னார்கோவிலுக்கு அருகில், திருவண்ணாமலை, வாழவச்சனூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, கடலூர் மாவட்டத்தில் தனியார் வேளாண் கல்லூரிகளும் இருக்கின்றன. காட்டுமன்னார்கோவில் தொகுதியில் உள்ள மாணவர்கள் இந்தக் கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெறலாம்.

மேலும், கடலூரில் செயல்பட்டுவரும் கரும்பு ஆராய்ச்சி நிலையம், திண்டிவனத்தில் செயல்பட்டுவரும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம், கடலூர் மாவட்டம், பாலூரில் செயல்பட்டுவரும் காய்கறிப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம், கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் செயல்பட்டுவரும் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையங்களைத் தொடர்பு கொண்டு விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கான விளக்கங்களையும், தொழில்நுட்ப வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தத் தருணத்தில், இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாதவகையில், மகளிருக்கென தனியே ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை ஏற்படுத்தி, மகளிரின் கல்விக்கு ஏற்றம் தந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்வதில் பெருமை அடைகிறேன்.

எனவே, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கக் கருத்துரு தற்போது எதுவும் பரிசீலனையில் இல்லை என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச்சென்று சமர்ப்பிப்பேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி தந்த கலைச்செல்வி, காவியம் கண்ட பெருந்தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கவனத்திற்கு என்னுடைய கோரிக்கை கொண்டு செல்லப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையிலே இதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து raise பண்ண நான் அனுமதி தரமுடியாது. ** குறித்தெல்லாம் அவையில் பேசமுடியாது. நீங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதுகுறித்து பேசுவதையெல்லாம் நான் அவைக்குறிப்பில் ஏற்ற முடியாது. (குறுக்கீடுகள்) ** குறித்துப் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிற்கு நான் கொண்டுவரமுடியாது. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதுகுறித்துப் பேசாமல், வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசவும். (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அனுமதியில்லை. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.